Registered as a Newspaper மக்கள் 04 விலை: ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி Peoples Daily

நாதம் 04 திருவள்ளுவர் ஆண்டு 2024 மார்கழி 20 (04-01-1994) செவ்வாய்க்கிழமை ஓசை 320

## உற்பத்தி தொழிலாளர் 40,000 பேர் யுத்தத்தினால் வேலையிழப்பு

யுத்தத்தினால் உற்பத்தித் தொழில் முயற்சியில் ஈடுபட்டிருந்த சுமார் 40,000 பேர் தமது தொழில்களை இழந்துள்ளனர். இதனால் தமிழர்களின் உற்பத்தித் தொழில் முயற்சிகள் பெருமளவு பாதிக்கப்பட்டுள்ளன. பெருமளவு சொத்துக்களும் நாசமாக்கப்பட்டுள்ளன. மதத்தலங்கள் அதிகளவில் அழிக்கப்பட்டுள்ளன. அதிகளவு சிறுவர்கள் அனாதைகளாக்கப்பட்டனர். சர்வதேச பத்திரிகை ஒன்றில் வெளியாகிய புள்ளி விபரம் ஒன்றில் இருந்து இவை தெரியவருகிறது, மக்களின் இடம்பெயர்வு, மின்சாரம் இன்மை, எரிபொருள் தடை, உற்பத்திக்கான உள்ளீடுகள் மீதான தடை ஆகியவையே இதற்குக் காரணங்கள் ஆகும். யாழ். மாவட்டத்தில் மட்டும் சுமார் ஒரு லட்சத்து அறுபத்தோராயிரத்து முந்நூற்று (3ஆம் பக்கம் பார்க்க)

### புலிகளின் கடல்வழி ஊடுருவலைத் தடுக்க

# கரையோரக் கண்காணிப்பிற்கென புதிய தளபதி ஒருவரை நியமிக்குக!

## ஓய்வுபெற்ற லெப். ஜெனரல் வலியுறுத்து

(கொழும்பு)

**கடல் வழியாக விடுதலைப் புலிகளின் ஊடுருவல்கள் அதிகரித்துள்ளமையால், கரையோரங்களைக் கண்காணிக்கவென புதிய தளபதி ஒருவரை அரசாங்கம் நியமிக்க வேண்டுமென ஓய்வு பெற்ற இராணுவ அதிகாரி லெப். ஜெனரல் டென்னிஸ் பெரேரா வேண்டுகோள் விடுத்துள்ளார். இது தொடர்பாக 'லங்கா காடியன்' சஞ்சிகைக்கு அவர் அளித்த பேட்டியில் மேலும் தெரிவிக்கையில்;**

நாம் ஒரு தீவிலேயே இருக்கிறோம். தரைவழி இல்லாத போதும் ஆயுதங்களினதும், மனிதர்களினதும் ஊடுருவல் உண்டு. அந்த இடைவெளிகள் மூடப்பட வேண்டும். தரையில் உள்ள எதிரிகளுக்கு உதவி கிடைக்கக் கூடிய பாதைகளை கண்டு பிடிக்க வேண்டும்.

எமது போர்த் தந்திரம். ஒரு சட்டம் ஒழுங்கை நிலை நாட்டும் பிரச்சினை என பலர் எண்ணுகிறார்கள். ஆனால் உண்மையில் விடுதலைப் புலிகளின் ஆற்றலை அழிக்கவே என்பது தெளிவாகிறது.

கடற்படையும், வான்படையும் ஆயுதம் பெறும் வழிகளையும் பயணம் செய்யும் படகுகளையும் கண்டுபிடித்து அழிக்க வேண்டும். கரையோரக் கண்காணிப்பு தளபதி ஒருவரை நியமிக்க வேண்டும்.

இராணுவ திட்டமிடலில் உள்ள பலவீனங்கள் சரி செய்யப்பட்டனவா? நிலைமை சீர் செய்யப்பட்டனவா? ஈடு செய்வதில் தாமதம் உண்டா? இராணுவத்திடம் தொடர்ச்சியான திட்டங்கள் உண்டா? போன்ற கேள்விகள் எழுப்பப்பட வேண்டும் எனத் தெரிவித்த அவர் ஒவ்வொரு ஸ்தாபனமும் தோல்விகளிலிருந்து பாடங்கற்றுக் கொள்ள வேண்டும் எனவும் தெரிவித்தார்

இதேவேளை புலனாய்வுத் துறை தோல்வியுற்றுள்ளதா? அல்லது கிடைக்கப்பட்ட தகவல்கள் உதாசீனம் செய்யப்பட்டதா என ஆராயப்பட வேண்டும் என தெரிவித்துள்ளார்,

## இரத்மலானையில்விமானபடைத்தளம் அமைக்க அரசாங்கம் முயற்சி

(கொழும்பு)

கொழும்பு இரத்மலானை விமான நிலையத்தை யுத்த விமானங்கள் தரிக்கக்கூடிய வகையில் இராணுவ விமான நிலையமாக மாற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது தாக்கலாம் என்ற அச்சத்தினால் மிகுந்த பாதுகாப்பான ஓர் இடம் விமானங்கள் தரிப்பதற்கு தேவை என்ற காரணத்தினாலேயே இத்தீர்மானம் எடுக்கப்பட்டதாக பாதுகாப்பு அமைச்சு

கள் தரிப்பது உசிதமானதல்ல என்ற முடிவுக்கு பாதுகாப்பு அமைச்சு வந்துள்ளது.

இவ் விமான நிலைய விஸ்தரிப்பினால் 1800பேர் தமது இருப்பிடங்களை இழந்துவிட இருப்பதாகவும் இவர்களுக்கு

### இன்று படகுச்சேவை

கிளாலி - பூநகரி படகுச் சேவை இன்று வழமையான

### முதன்மை ஆசிரியர் நியமனம்

## 10ஆம் திகதிக்கு முன்னர் பதவி ஏற்கப் பணிப்பு

(நல்லூர்)

யாழ் மாவட்டத்திற்கு நியமிக்கப்பட்ட முதன்மை ஆசிரியர்களுக்கான நியமனக் கடிதங்கள் யாழ். கல்விப் பணிப்பாளர் செல்வி ரி. பெரியதம்பியினால் நேற்றைய தினம் யாழ். கல்வித் திணைக்களத்தில் வழங்கப்பட்டது. முன்னர் சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்களாக கடமையாற்றியவர்களின் சேவை கடந்த 31ஆம் திகதியிலிருந்து முடிவு செய்யப்பட்டு ஜனவரி முதலாம் திகதியிலிருந்து முதன்மை ஆசிரியர்கள் என்ற பெயர் மாற்றத்துடன் ஒரு வருடத்துக்கு நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

இவ்வாறு நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்ட முதன்மை ஆசிரியர்கள் எதிர்வரும் 10-ம் திகதிக்கு முன்னர் தமது கடமைகளை பொறுப்பேற்க வேண்டும் எனவும் இத் திகதியினுள் கடமையைப் பொறுப்பேற்காதோரின் நியமனம் இதன்பின்னர் எவ்வித அறிவித்தலும் இன்றி இரத்துச் செய்யப்பட்டு புதியவர்கள் நியமிக்கப்படுவார்கள் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேசமயம் தூர இடங்களுக்கு நியமனம் பெற்றுள்ள சில முதன்மை ஆசிரியர்கள் பதவி ஏற்க தயங்குவதாகவும் தெரியவருகிறது

## இழப்பு குறித்த அச்சமே தாக்குதலை தாமதப்படுத்துகிறது

### எயார் மார்ஷல் ஜெறி மென்டிஸ்

### புக்காரா நோட்டம்

(வடமராட்சி)

சிறிலங்கா அரசின் ''புக்காரா'' விமானம் ஒன்று இரண்டு தடவைகள் பருத்தித்துறை பகுதியை வட்டமிட்டு நோட்டமிட்டது.

நேற்றுக் காலை 7மணியளவில் வந்த இவ் விமானம் கடற்பிராந்தியப் பகுதியை வட்டமிட்டுநோட்டமிட்டது. இரண்டாவது தடவையாக 9.15 மணிக்கு வந்த இக் (3ஆம் பக்கம் பார்க்க)

### நீதிமன்றம் அபராதம்

(மல்லாகம்)

சட்ட விரோதமாக கசிப்பு காய்ச்சி விற்பனை செய்தமைக்காக இருவருக்கு சுன்னாகம் மாவட்ட நீதிமன்றினால் அபராதம் விதிக்கப்பட்டது

மானிப்பாய், சங்கரப்பிள்ளை வீதியைச் சேர்ந்த விக்னேஸ்வரன் பரமேஸ்வரி என்பவர் சட்ட விரோதமாக (3ஆம் பக்கம் பார்க்க)

### மாணவருக்கு காப்புறுதி

(கொழும்பு)

சகல பல்கலைக் கழகங்கள் மற்றும் தொழில் நுட்பக் கல்லூரி மாணவர்களும் காப்புறுதி செய்யப்பட உள்ளனர்.

இம் மாணவர்கள் கல்வியைத் தொடரும் போது ஏற்படும் ஆபத்துக்களுக்கு நஷ்டஈடாக 50 ரூபா முதல் ஒரு லட்சம் ரூபா வரை வழங்கப்பட உள்ளது

(கொழும்பு)

கொழும்பு இரத்மலானை விமான நிலையத்தை யுத்த விமானங்கள் தரிக்கக்கூடிய வகையில் இராணுவ விமான நிலையமாக மாற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என கொழும்பு பத்திரிகையொன்று தெரிவிக்கின்றது.

பிரேமதாசா இத் திட்டத்தை ஆரம்பித்தபோதும், மக்களின் பலத்த எதிர்ப்பையும் சீனன்குடா குண்டு வெடிப்பையும் தொடர்ந்து இத் திட்டம் கைவிடப்பட்டது.

விமான நிலையங்களையும் விமானங்களையும் புலிகள் தாக்கலாம் என்ற அச்சத்தினால் மிகுந்த பாதுகாப்பான ஓர் இடம் விமானங்கள் தரிப்பதற்கு தேவை என்ற காரணத்தினாலேயே இத் தீர்மானம் எடுக்கப்பட்டதாக பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

எதிர்காலத்தில் வடக்கு கிழக்கில் நடைபெறவுள்ள தாக்குதல் திட்டங்களுக்கு விமானப்படை மிக முக்கியமானதாக அமையவிருப்பதாலும், இது தொடர்பாக அவசர திட்டங்கள் வகுக்கப்பட இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது எல்லா விமான நிலையங்களிலும் யுத்தவிமானங்கள் தரிப்பது உசிதமானதல்ல என்ற முடிவுக்கு பாதுகாப்பு அமைச்சு வந்துள்ளது.

இவ் விமான நிலைய விஸ்தரிப்பினால் 1800பேர் தமது இருப்பிடங்களை இழந்து விட இருப்பதாகவும் இவர்களுக்கு பாதுகாப்பு நிதி திட்டத்தின் கீழ் நட்டஈடு வழங்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இன்று படகுச்சேவை

கிளாலி - பூநகரி படகுச் சேவை இன்று வழமையான நேரத்திற்கு நடைபெறும்என அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர்.

## 3வார காலத்திற்குள் பிறப்பு, இறப்பு சான்றிதழ்

(நமது நிருபர்)

விவாக, பிறப்பு, இறப்பு விண்ணப்பங்களுக்கான சான்றிதழ்கள் விண்ணப்பங்கள் பெறப்பட்ட மூன்று வாரங்களுக்குள் விண்ணப்பதாரிகளுக்கு அனுப்பி வைக்கப்படும் என காணிப்பதிவாளரும் மேதிலக மாவட்டப் பதிவாளருமான திரு. ந. சதாசிவஐயர் அறிவித்துள்ளார்.

இதன்படி குறிப்பிட்ட கால எல்லைக்குள் சான்றிதழ்கள் கிடைக்காதுவிடின் விண்ணப்ப இலக்கம், திகதி, பிறந்த இடம், பிறந்த திகதி ஆகிய விபரங்களையும் தங்கள் விலாசத்தையும் ஒரு தாளில் குறிப்பிட்டு தம்மிடம் அல்லது திரு. அ. பொன்னம்பலத்திடம் நேரில் சமர்ப்பிக்குமாறும் கேட்டுள்ளார். அதற்கான பதில் மறுநாள் உரியவருக்கு தபாலில் சேர்க்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ச, சி)

## ஜனாதிபதி விஜேதுங்க இராணுவத்தளபதி சந்திப்பு

(கொழும்பு)

சிறிலங்காவின் புதிய இராணுவத்தளபதியாக பதவி ஏற்ற லெப். ஜெனரல் ஜெரிடி சில்வா நேற்று சிறிலங்கா ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கவைச் சந்தித்துள்ளார்.

நேற்றுக்காலை சிறிலங்கா ஜனாதிபதியின் இல்லத்தில் அவரைச் சந்தித்து நீண்ட நேரம் கலந்துரையாடியுள்ளார். ஆனால் இக்கலந்துரையாடலின் விபரங்கள் ஏதும் இதுவரை வெளியிடப்படவில்லை.

## இழப்பு குறித்த அச்சமே தாக்குதலை தாமதப்படுத்துகிறது

### எயார் மார்ஷல் ஜெரி மென்டிஸ்

(கொழும்பு)

''கடந்த சில வருடங்களில் சிறிலங்கா இராணுவம் உருக்குலைக்கப் பட்டுள்ளது. இதன்விளைவாக விடுதலைப் புலிகளுக்கெதிராக இராணுவ உயர்பீடம் நடாத்தும் யுத்தத்தில் வெற்றிபெற முடியவில்லை. இராணுவ உயர் மட்டத்தினரின் தோல்வி மனப்பான்மையும் கிளாலி யுத்தத்தில் இராணுவம் சந்தித்த இரத்தக் களரியும் இழப்புக்களும் படையணிகளை உருக்குலைத்து விட்டது'' இவ்வாறு எயார் மார்ஷல் ஜெரி மென்டிஸ் தெரிவித்துள்ளார்.

மீண்டும்இவ்வாறானஇழப்புக்களையும் படுகொலைகளையும்ராணுவம்சந்திக்ககூடாது என்பதே இராணுவ பீடத்தினது தீர்மானம் ஆகும். இதுவே யாழ். குடாநாட்டின் மீது பாரிய தாக்குதலை நடாத்துவதை தவிர்த்துள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அரசியல்வாதிகள் அரசியல் இலாபங்களுக்காக யுத்தத்தைப் பயன்படுத்துவதில் இருந்து பாதுகாக்கப்பட வேண்டும். அத்துடன் புலிகளுக்கெதிரான யுத்தத்திற்கு ஆதரவளிப்பதற்கு அனைவரும் ஒன்று சேரவேண்டும் என்றும் அவர் மேலும் கூறியுள்ளார்.

## சிற்றூழியர் அலட்சியத்தால் நோயாளிகள் சிரமம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் கடமையாற்றும் சிற்றூழியர்ஒருசிலர் தமது கடமைகளை அலட்சியம் செய்வதாகத் தெரியவருகின்றது.

நேற்று முன் தினம் இரவு 11. 25மணியளவில் அவசர சிகிச்சைக்காகக் கொண்டு வரப்பட்ட பெண் நோயாளி ஒருவரை டாக்டர் உடனடியாக பரிசோதித்து சிகிச்சைக் களத்தில் அனுமதிக்க உத்தரவு பிறப்பித்த போதும், அந்த நோயாளி சிகிச்சைக் களத்திற்கு 12 30மணிக்குப் பின்னரே எடுத்துச் செல்லப் பட்டார் அதாவது சிற்றூழியரின் அலட்சியம் காரணமாக நோயாளி எடுத்துச் செல்லப்படுவதற்கு சுமார் ஒரு மணித்தியால அளவுக்கு தாமதமேற்பட்டுள்ளது, இந்தநிலையில் வெளிநோயாளர் பகுதியிலேயே சம்பந்தப்பட்ட நோயாளி மயக்கமுறும் நிலை ஏற்பட்டது. இதேபோல வயிற்றுப்போக்கு காரணமாக அனுமதிக்கப்பட்ட ஒரு நோயாளியும் சிகிச்சைக்களத்திற்குஅனுப்பி வைக்கப்படுவதில் தாமத மேற்பட்டுள்ளது. (நி)

## அடக்கு முறையால் தமிழரை அடிபணியச் செய்ய முயற்சி

(கொழும்பு)

சிறிலங்கா அரசின் நோக்கம் அடக்கு முறைகளால் தமிழர்களை அடிபணியச் செய்வது தான் என்பதில் எதுவித சந்தேகமும் இல்லை இதற்கு பொருளாதாரத் தடையின் மூலம் இதை சாதிக்க முயல்கிறது

இவ்வாறு மஜன் விஜே என்பவர் எழுதிய சிறிலங்காவின் பொருளாதார முற்றுகை கட்டுரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச சட்டத்துக்கு முரணாக உணவு, மருந்து, மக்களின் அத்தியாவசியப் பொருள்கள் ஆகியவற்றின் மீதான தடைகள் பெரும்பாலும் வெளிஉலகத்துக்குத் தெரியாமல் உள்ளது. சிறிலங்காவில் தற்போது செயற்பட்டுவரும் சர்வதேச அமைப்புக்களின் உதவிப் பணிகளினாலும், அரசின் செய்தித் தணிக்கைகளாலும் கொழும்புப் பத்திரிகைகள் உட்பட வெகுஜனத் தொடர்பு சாதனங்கள மக்களின் துயர்கள் குறித்து அக்கறை கொள்ளவில்லை. இந்த வகையில் இவை தமதுகடமைகளில் இருந்து தவறிவிட்டன. யுத்த நடவடிக்கையின்போது கடைப்பிடிக்கப்படும் சட்டங்களும், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கமும் சிறிலங்காவில்உள்ளது. எனினும்பொருளாதார முற்றுகை தொடர்கிறது. இதனால் தமிழ் மக்கள் எதிர்நோக்கி வரும் கஷ்டங்களை வெளி உலகத்துக்குத் தெரியப்படுத்தப்பட வேண்டும் என்றும் அக்கட்டுரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### ஜே. வி. பி. கிளர்ச்சி காலத்தில்

## 300பேரைக் கொன்று புதைத்த இடம் இரத்தினபுரியில் கண்டுபிடிப்பு

(கொழும்பு)

இரத்தினபுரி மாவட்டத்திலுள்ள எம்பிலிப்பிட்டியாவில் பாடசாலை மாணவர்கள், பொதுமக்கள், பௌத்த பிக்குகள் உள்ளிட்ட 300க்கு மேற்பட்டவர்களை கொலை செய்து புதைத்துள்ள இடமொன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக பி.பி.ஸி. செய்தியாளர் லூசியன் ராஜகருணநாயக்கா தெரிவித்துள்ளார்.

1989ம் ஆண்டு சிறிலங்கா அரசாங்கத்திற்கு எதிராக நடந்த கிளர்ச்சியின்போது அரசாங்க சார்புடைய பயங்கரவாத அதிரடிப்படையினரால் கொல்லப்பட்டதாக நம்பப்படுவோரின் புதைகுழிகள் இரத்தினபுரி கொலன்னே பகுதியில் சூரியகாந்த மலையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இம் மலைத்தொடர் நன்கு பாதுகாக்கப்பட்ட தொடராகும். இதில் நிரந்தர பொலிஸ் நிலையம் அமைந்திருந்ததுடன், 1988-ம் ஆண்டு தொடக்கம் 1990-ம் ஆண்டுவரை ஒரு பெரிய இராணுவமுகாம் அமைந்திருந்தது எனவே இப்பகுதிக்கு வெளியார்களோ அன்றி ஜே.வி,பியினரோ செல்லமுடியாது. எனவே இதனைச் செய்தது இராணுவம் அல்லது அரசாங்கம் தொடர்புடைய ஆயுதக் குழுக்கள் மட்டுமே.

சுதந்திரக் கட்சிக்குக் கிடைத்த தகவலைத்தொடர்ந்து சந்தேகத்துக்கிடமான மேற்படி குழிகளைத் தொண்டர்கள் தோண்டிய போது பல சடலங்களின் எச்சங்கள் கொண்டுவரப்பட்டன. இரு இடங்களை மட்டும் தோண்டியபோது மூன்று மண்டை ஓடுகள், பல மனித எலும்புகள், புத்த பிக்குவின் அங்கி போன்றவை சுமார் நான்கு அடி ஆழத்தில் கண்டுபிடிக்கப்பட்டன.

தோண்டத் தொடங்கி ஒரு மணித்தியாலத்தில் இவ்வளவு தொகையைக் கண்டு பிடித்தமை இவ்விடத்தில் இன்னும் உடல்

(3ஆம் பக்கம் பார்க்க)

## திறந்த பல்கலைக்கழகம் மீண்டும்இயங்கஆரம்பிக்கும்

(யாழ்ப்பாணம்)

யாழ். திறந்த பல்கலைக்கழகத்தை மீண்டும் ஆரம்பிப்பதற்கான முயற்சிகள் தற்போது வெற்றி அளித்துள்ளதாகவும், இதற்கு தற்காலிகமாக யாழ் தொழில் நுட்ப அதிபர் ஜெயரட்ணம் இணைப்பாளராகப் பதவியேற்றுள்ளார்.

இதில் ஆரம்ப பயிற்சி நெறியான முகாமைத்துவத்திற்கான தகைமைச் சான்றிதழ் நெறி ஆரம்பிக்கப்பட இருக்கின்றது. இதற்கான பரீட்சைகள் யாழ்ப்பாணத்தில் நடத்தப்படும் என உயர்கல்வி அமைச்சினால் உறுதியளிக்கப்பட்டதாக தெரியவருகின்றன.

இத்திறந்த பல்கலைக்கழகம் பல காரணங்களை முன்னிட்டு இயங்காமல் இருந்தமை குறிப்பிடத்தக்கது. இதேவேளை எதிர்காலத்தில் பல கல்வி நெறிகள் இங்கு ஆரம்பிக்கப்படும் என்றும், இதற்கு சகல தரப்பிலும் உதவிகள் எதிர்பார்க்கப்படுகின்றன.

## வரி விளம்பரம்


### பழங்கள் தேவை

உங்கள் வீட்டுத் தோட்டங்களில் உள்ள பசன் பழங்களையும், பப்பாசிப் பழங்களையும் நாம் கொள்வனவு செய்கின்றோம். TASTE LINE INDUSTRIES (PVT) LTD, 14, Seenier Lane, Jaffna. (சி-8249)

### கோழிக்குஞ்சுகள் விற்பனைக்கு

கைலன் (HYLINE BROWN) பேட்டுக் குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு. மல்லிகா பதி, சந்தை கிழக்கு ஒழுங்கை மானிப்பாய். (7122)

### விற்பனைக்குண்டு

ஹொண்டா லீற் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி சந்திரன் கராஜ் (வீரமாகாளி அம்மன் கோவிலருகில்) பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். (7120)

### தேவை

யாழ்நகரில் இயங்கிக் கொண்டிருக்கும் மருந்தகத்துக்கு கணக்குபதிவாளர், கொள்வனவு பொறுப்பாளர் (கொழும்பு சென்று வரக் கூடியவர்), மருந்து விற்பனையாளர் பதவிகளுக்கு விண்ணப்பம் கோரப்படுகின்றது. விண்ணப்பத்தை 10-01-1994 க்கு பிந்தாமல் எழுத்து மூலம் என். தனபாலசிங்கம் 5, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பவும். (7126)

### கடிகாரங்களா? றேடியோவா?

நல்ல நிலையில் உள்ள கடிகாரங்கள், றேடியோக்கள் உதிரிப்பாகங்களுக்காக வாங்கப்படும். விற்கப்படும். சகல கடிகாரங்கள் றேடியோக்கள் உத்தரவாதத்துடன் திருத்தப்படும். டில்காவாச் அன்ட் றேடியோ வேக்ஸ் (Dilka Watch & Radio Works) ஸ்ரான்லி வீதி, (வானவில் அருகில்) கிளை: கண்டி வீதி, சாவகச்சேரி. (சி-8129)

### மூக்குக்கண்ணாடி

எவருடைய கமிஷன் அடிப்படை சிபார்சும் இல்லாமல் டாக்டர்களின் மருந்துச் சிட்டைக்கு அமைய உங்கள் கண்களுக்கும் - முகங்களுக்கும் ஏற்ற மூக்குக் கண்ணாடிகளை தாமதம் எதுவும் இல்லாமல் பெற்றுக்கொள்ள நாடுங்கள்: மொறாயஸ் 50, மணிக்கூட்டு வீதி, வெலிங்


## விபத்துக்கள் அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். வேம்படிச் சந்தியில் தற்போது விபத்துகள் அதிகரித்துள்ளன. தினசரி குறைந்தது மூன்று விபத்துகளாவது இடம் பெறுகின்றன. சென்ற புதன் கிழமை (29-ம் திகதி) எட்டுக்கும் மேற்பட்ட விபத்துக்கள் இடம்பெற்றன. (22)

## 31-ம் நாள் நினைவஞ்சலி



பிறப்பு: 15 - 04 - 1926

இறப்பு: 05 - 12 - 1993

**கிறிஸ்தோப்பர் சுவக்கின் (தோமஸ்)**

(பழைய பூங்கா வீதி, குருநகர்.)

(7132) -பிள்ளைகள், பேரப்பிள்ளைகள்

## நான்காம் ஆண்டு கண்ணீர் அஞ்சலி



வேலணை கிழக்கைச் சேர்ந்த

**செல்வி யோதிகா யோகராசா**

(யோயோ)

ஆனந்தக் கடலில் ஆழ்த்தி மலர்ந்தது: 22-10-1986

ஆறாத் துயரில் ஆழ்த்தி மறைந்தது: 19-12-1989

திதி:- *04 01-1994*

எட்டு ஆண்டுகள் தவமிருந் தெம்மை ஏங்கித் தவிக்க வைத்தாய்—பின்
கட்டுலகில் வந்து பிறந்து எம்இதயம் களிக்கவைத்தாய்


**ஜனவரி 9'** ஞாயிறு (மாலை 3 மணி) முதல்

புதிய பிரிவுகள் ஆரம்பம்

O/L (ஆண்டு 11)

ஆண்டுகள் *10, 9*

★ உங்கள் அனுமதிகளைப் பெற்றுக்கொள்ளவும்.

## புதிய உயர் கல்லூரி

ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்

(சி-8270)

முதற் தடவையாக

## A/L 94 DAY CLASS

விஞ்ஞானப் பிரிவு

ஆரம்பம் *10-01-94* காலை 8.30 மணி

- திங்கள், செவ்வாய், வியாழன், வெள்ளி ஆகிய நான்கு நாட்களும் வகுப்புகள் நடைபெறும்.
- இவ்வகுப்பு பாடசாலை செல்லாத மாணவர்களுக்குரியது.
- முழுப்பாடத்திட்டமும் பூர்த்திசெய்யப்படும்.
- அனுமதிகளை முன்கூட்டியே பெற்றுக் கொள்ளவும்.

### யூனிவேர்சல்

கந்தர்மடம் - யாழ்ப்பாணம்.

### பொண்ட் இன்ஸ்ரிரியூட்

ஸ்ரான்லி வீதி - யாழ்ப்பாணம்.

(சி-8272)


ஈழநாதம்

## 4-ம் ஆண்டு நிறைவு

### போட்டிகளும், விதிமுறைகளும்

ஈழநாதம் மக்கள் தினசரி நான்காவது ஆண்டு நிறைவைக் குறிக்கும் முகமாக சிறுகதைப்போட்டி, கவிதைப்போட்டி என்பவற்றை நடாத்த முன்வந்துள்ளது. இப் போட்டிகளில் சமகால நிகழ்வுகளைப் பிரதிபலிக்கும் உள்ளடக்கங்கள் விரும்பி வரவேற்கப்படும்.

## 8-ம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு 18-02-1946

இறப்பு 04-01-1986

**பற்றிமாராணி (மதுரம்)**
**பற்றிக் இம்மனுவேல்**

'மதுரம்' என்று பெயர் கொண்டு
மஞ்சளுடன் குங்குமமும்
மணமுவந்து நீ பெற்று
மக்கள் எம்மைப் பெற்றெடுத்து
மலராகுமுன்னே மறைந்துவிட்டாய்
மறக்கவில்லையம்மா — நின்
மடியில் நாம் பெற்ற மகிமைகளை
மலர்சாத்தி செய்கிறோம் அஞ்சலிகள்.

-பி. பற்றிக் இம்மனுவேல்-
பிள்ளைகள்.

''மதுரம்'' 140/9, 4-ம் குறுக்குத்தெரு,
சில்லாலை. (7117) யாழ்ப்பாணம்.

## நினைவு கூருகின்றோம்...

### 1994-01-04

1985ஆம் ஆண்டு இதேதினத்தில் யாழ்ப்பாணத்தில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய-

❀ சோமேஸ் (—சோமேஸ்வரன் - திருநெல்வேலி - யாழ்ப்பாணம்)

1986ஆம் ஆண்டு வீரச்சாவெய்திய-

❀ **கதிர்காமன் நவரத்தினம்** (முறக்கொட்டாஞ்சேனை - மட்டக்களப்பு)

யாழ்ப்பாணத்தில் சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட தரை, வான் தாக்குதல்களிற் கொல்லப்பட்ட 06 தமிழர்கள்.

1988ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் - நீர்வேலி, அச்செழுப் பகுதியில் இந்தியப்படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

**கப்டன் அருள்மாஸ்ரர்** (மாணிக்கம் ரவீந்திரராஜா - 268/21, காங்கேசன்துறை வீதி - யாழ்)

**சுரேஷ் மாஸ்ரர்** (பத்மநாதன் சுரேஷ்குமார் - நீர்வேலி வடக்கு - யாழ்)

மணலாறு - புதுக்குடியிருப்புப் பகுதியில் இந்தியப் படையினர் மேற்கொண்ட நடவடிக்கைகளிற் படுகொலை செய்யப்பட்ட 08 தமிழர்கள்.

1989ஆம் ஆண்டு மட்டக்களப்பு - நாவற்குடாப்

களுக்கும் - முகங்களுக்கும் ஏற்ற மூக்குக் கண்ணாடிகளை தாமதம் எதுவும் இல்லாமல் பெற்றுக்கொள்ள நாடுங்கள்: மொறாயஸ் 50, மணிக்கூட்டு வீதி, வெலிங்டன் சந்தி, யாழ்ப்பாணம்.

(சி-8274)

## சந்தை இயங்க நடவடிக்கை

நீண்ட காலமாக சந்தைக் கட்டடத்தில் இயங்காதிருந்த பருத்தித்துறை பிரதேசசபையின் மாயக்கை பொது சந்தையை இவ்வருடம் (1994) முதல் உரிய சந்தைக்கட்டடத்தில் இயங்கவைப்பதற்கான துரித நடவடிக்கைகளைப் பருத்தித்துறை பிரதேசசபை மேற்கொண்டுள்ளது. (25)

திதி:- 04 01-1994

எட்டு ஆண்டுகள் தவமிருந் தெம்மை ஏங்கித் தவிக்க வைத்தாய்—பின்
கட்டுலகில் வந்து பிறந்து எம்இதயம் களிக்கவைத்தாய்
சிட்டு நீ பறந்து திரிந்து எமை சிரிக்க வைத்தாய் — புவிமடியில்
இட்டு உனை மறைத்து ஏன் அரற்ற வைத்தாய்.

உன் பிரிவால் நாம் படும் துயரச் சங்கதி அறிவாயோ? — உணர்ந்து
நின் பிறவி எடுத்து மீண்டும் நிகழ வருவாயோ?
அன்புடன் வந்துநீ கண்ணீரி லாழ்த்திஎமைபிரிந்தோடி
இன்றுடன் நான்காண்டான தம்மா இது நாம் படும் துயரமம்மா;

என்றும் உன் நினைவாக ஏங்கித் தவிக்கும் பிரியமுள்ள

4412, விதானையார் ஒழுங்கை, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.

அப்பா, அம்மா, அண்ணாமார், உறவினர்கள்.

(7121)

# 3-ம் ஆண்டு நினைவலைகள்





| கப்டன் **அமலன்** தம்புத்துரைச்சாமி விஜயசிங்கம் | | வீரவேங்கை **யேக்கா** தம்புத்துரைச்சாமி சீதாலட்சுமி (சீதா) |
|---|---|---|
| 10-3-69 | <— மலர்வு —> | 23-6-70 |
| 4-1-91 | <— வீரச்சாவு —> | 30-11-90 |

(சங்குவத்தை, வீரமாணிக்கன் தேவன்துறை மயிலிட்டி)

இலட்சியப்பாதையில் வித்தானவர்களே உங்கள் பாதையை நாமும் பின்தொடர்வோம்.

தற்போதைய முகவரி;
கண்ணன் கோவில் வீதி,
மட்டுவில் தெற்கு.

என்றும் உங்கள் நினைவு மறவாத
- குடும்பத்தினர்.

(7076)

ஈழநாதம் மக்கள் தினசரி நான்காவது ஆண்டு நிறைவைக் குறிக்கும் முகமாக சிறுகதைப்போட்டி, கவிதைப்போட்டி என்பவற்றை நடாத்த முன்வந்துள்ளது. இப் போட்டிகளில் சமகால நிகழ்வுகளைப் பிரதிபலிக்கும் உள்ளடக்கங்கள் விரும்பி வரவேற்கப்படும்.

## ❀ சிறுகதை ❀ கவிதை

### போட்டிகளில் கலந்துகொள்வோர் கடைப்பிடிக்கவேண்டியவை

- படைப்புகள் யாவும் சமகால நிகழ்வுகளைச் சித்திரிக்கும்வண்ணம் அமைதல்வேண்டும்.
- படைப்புகள் யாவும் தாளின் ஒருபக்கத்தில் தெளிவான கையெழுத்தில் அல்லது தட்டச்சு செய்யப்பட்டதாக இருத்தல் வேண்டும்.
- சிறுகதைகள் சுமார் 1500 சொற்களுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும்.
- கவிதைகள் 30 வரிகளுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும்.
- படைப்பாளரின் பெயர், முகவரி என்பன தனித் தாளில் எழுதப்படவேண்டும் என்பதுடன் படைப்பாளர்கள் தமது சொந்த ஆக்கம் என்பதை உறுதிப்படுத்தவேண்டும்.
- ஆக்கங்கள் இதற்குமுன் பிரசுரமானதாகவோ, வேறெங்கும் பிரசுரம் செய்வதற்காக கையளிக்கப்பட்டவைகளாகவோ இருத்தல் கூடாது.
- போட்டிக்கான ஆக்கங்கள் அனைத்தும் ஜனவரி 31ஆம் திகதிக்குப் பிந்தாமல் 'ஈழநாதம்' அலுவலகத்தில் சேர்க்கப்படவேண்டும். பிந்திக்கிடைக்கும் ஆக்கங்கள் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படமாட்டாது.

போட்டி முடிவுகள் யாவும் 17-02-1994 ஈழநாதம் தினசரியில் அறிவிக்கப்படும்.

இப் போட்டிகளில் முதலாவது பரிசுபெறும் ஆக்கங்கள் நான்காவது ஆண்டு நிறைவு விழா மலரில் பிரசுரிக்கப்படும்.

ஒவ்வொரு துறையிலும் தகுதியானவை எனத் தேர்ந்தெடுக்கப்படும் ஆக்கங்கள் ஈழநாதம் இதழ்கவில் பிரசுரமாகும்.

முதல் மூன்று இடங்களையும் பெறும் ஆக்கங்களுக்கு நான்காவது ஆண்டு நிறைவுநாளில் சிறப்புப் பரிசில்கள் வழங்கப்படும்.

ஆக்கங்கள் அனைத்தும் 'ஈழநாதம் ஆண்டு நிறைவுப்போட்டி' என கடித உறையில் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிடப்பட்டு

**ஆசிரியர்,**

**ஈழநாதம்**

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம்.

என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கப்படல்வேண்டும்.

நீர்வேலி வடக்கு - யாழ்)

மணலாறு - புதுக்குடியிருப்புப் பகுதியில் இந்தியப் படையினர் மேற்கொண்ட நடவடிக்கைகளிற் படுகொலை செய்யப்பட்ட 08 தமிழர்கள்.

1989ஆம் ஆண்டு மட்டக்களப்பு - நாவற்குடாப் பகுதியில் இந்தியப்படையினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய-

**கவாஸ்கர் கிருஷ்ணா** (சி. தர்மகிருஷ்ணன்- நாவற்குடா - மட்டக்களப்பு)

1991ஆம் ஆண்டு கிளி - ஆனையிறவு முகாம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

**கப்டன் அமலன்** (தம்புத்துரைச்சாமி விஜயசிங்கம் - வீரமாணிக்கதேவன்துறை, மயிலிட்டி, யாழ்)

மட்டக்களப்பில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக்கொல்லப்பட்ட இளைஞன் உட்பட செங்கலடி 02ஐச் சேர்ந்த 03 தமிழர்கள்.

1992ஆம் ஆண்டு திருக்கோணமலையில் எதிர்பாராதவிதமாக மிதிவெடி வெடித்ததில் எமைப் பிரிந்த-

**லெப். சக்தி** (கனகலிங்கம் சிறீஸ்கந்தராசா - சேனையூர் - திருக்கோணமலை)

முல்லைத்தீவு - முள்ளியவளை, தண்ணீரூற்றுப் பகுதியில் சிறிலங்காப்படையினர் மேற்கொண்ட விமானக் குண்டுவீச்சில் கொல்லப்பட்ட அதே இடத்தைச் சேர்ந்த இளம்பெண்.

1993ஆம் ஆண்டு வவுனியா - பாவற்குளம், 5-ம் படிவம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் சுற்றிவளைத்த போது ஏற்பட்ட சமரில வீரச்சாவெய்திய-

**சாரதி** (இராமு பாக்கியநாதன் - கொல்லன்விளாங்குளம் - மாங்குளம்)

**2-ம் லெப். மாமா** (சூசைப்பிள்ளை ஜேசுதாஸ் - இளவாலை - யாழ்)

இதே சம்பவத்தின் போது கொல்லப்பட்ட நாட்டுப்பற்றாளரான-

**சித்திரவேல்** (பரமு - பாவற்குளம் - வவுனியா)

யாழ் மாவட்டத்தில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட வெடிவிபத்தில் எமைப்பிரிந்த-

**கம்பன்-ஜெசி** (சின்னையா நித்தியேஸ்வரன்- முறிகண்டி - கிளிநொச்சி)

**ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.**

❀ இக்குறியிடப்பட்ட மாவீரர்கள் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவர்களாவர்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்.**

(சி-8273)

சிந்தனைக்கு

இன்பம் மிக்க கனவாயினும், எவரும் அதை வைத்து நீண்ட நாள் ஓங்கிச் செழிக்க முடியாது.
-கவென்றி பேட்மோர்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 04-01-1994

தொலைபேசி

ஆசிரியபீடம் 025 - 2839 நிர்வாக பீடம் 2023

# கனவு கலைகிறதா?

சிங்கள அரசியல்வாதிகள் இனப்பிரச்சினை குறித்து எதைக் கூறுவார்கள்? எப்படிக் கூறுவார்கள் என்று எவரும், எப்பொழுதும் திட்டவட்டமாகக் கூறிவிட முடியாது. சிலவேளை, இலங்கையில் இனப்பிரச்சினை ஒன்றே இல்லை, பயங்கரவாதப் பிரச்சினை மட்டுமே உள்ளது எனச் சாதிக்கும் அரசியல்வாதிகள், ஒருநாள் இரவில் புது அவதாரம் ஒன்றை எடுத்துக்கொண்டு, தமிழரின் பிரச்சினை ஒரு தேசிய பிரச்சினை, அதற்கு இராணுவத் தீர்வு சாத்தியமாகாது, அரசியல் தீர்வே காணப்படவேண்டும் எனத் தெரிவிப்பதும் உண்டு,

இந்தவகையிலேயே, சிறிலங்கா ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கவின் 'விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தத் தயார். ஆனால், தனிநாட்டுக் கோரிக்கையை ஆதரிக்கமுடியாது' என்ற அறிவிப்பையும் கருதமுடியும் ஆனால், இவ்வாறான அறிவிப்பு ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கவின் கடந்த ஆறுமாத அரசியல் நிலைப்பாட்டில்ஏற்பட்ட மாற்றம் என விமர்சகர்கள் தெரிவிக்கமுடியும் என்றாலும், இவ்வாறான அறிவிப்புக்கள் சிறிலங்கா அரசியல்வாதிகளிடம் இருந்து வருவதுஒன்றும் புதியதல்ல என்பதோடு, இவ்வறிவிப்பால் பயன்பாடு உள்ளதா என்பதும் கேள்விக்குரிய ஒன்றே.

ஜனாதிபதி டி. பி. விஜேதுங்க கடந்த மே மாதம் பதவியேற்ற உடன் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு ஒன்று காணப்படும் என்றும், அதற்கு வசதியாக பேச்சுவார்த்தைகள் நடத்த அரசாங்கம் தயாராக இருக்கின்றதென்றும் பகிரங்கமாக தெரிவித்திருந்தார். ஆனால், ஒரு மாத காலத்தில் திடீரென அவரின் நிலைப்பாடு மாறியது. சிங்களப் பேரினவாதத்தின் தலைவரானார். இலங்கையில் இனப்பிரச்சினை என்பதே இல்லை, பயங்கரவாதமேஉள்ளது. இதற்கு இராணுவத்தீர்வே ஒரே வழி, பேச்சுவார்த்தை என்பதற்கு இடமேயில்லை எனப் பேசத்தொடங்கினார்.

ஆனால், இன்று ஆறு மாதத்தின் பின்னர், திடீரெனக் கனவில் இருந்து விடுபட்டவர்போல வடக்கு - கிழக்கு மோதலுக்கு புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தித் தீர்வு காணவும், சிறுபான்மை இன மக்களுக்குக் கூடுதல் அதிகாரங்கள் வழங்கவும் அரசாங்கம் தயாராக உள்ளதாக அவர் அறிவித்துள்ளார். இது இக்காலப்பகுதிக்குள் அவர் பல பாடங்களைக் கற்றுக் கொண்டதைக் காட்டுகின்றதா? அன்றி, சிங்கள அரசியல்

# பத்து லட்சம் இலங்கைத் தமிழர் அகதிகளாக உள்ளனர்

-லண்டன் சஞ்சிகையில் தகவல்

(கொழும்பு)
வடக்கு, கிழக்கு பகுதிப் பிரச்சினையால் பத்து லட்சத்திற்கும் அதிகமான தமிழர்கள் அகதிகளாகி இருப்பதாக லண்டனிலிருந்து வெளியிடப்படும் எக்னாமிக் பிளாக்சிட் என்ற சஞ்சிகை தகவல் வெளியிட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் மூன்று லட்சத்திற்கும் அதிகமானோர் இடம்பெயர்ந்துள்ளனர். ஒரு லட்சத்து இருபதாயிரத்திற்கும் அதிகமானோர் இந்தியாவுக்கு சென்றுள்ளனர். கனடாவிலும், ஐரோப்பாவிலும் நான்கு லட்சத்திற்கும் மேற்பட்ட தமிழர்கள் அகதிகளாக தஞ்சம் புகுந்துள்ளனர்.

ஐந்து லட்சத்து பதின்நான்காயிரம் பேர்வரையிலேயே இடம்பெயர்ந்திருப்பதாக அரசாங்க புள்ளி விபரங்கள் கூறுகின்றபோதும் சுமார் பத்து லட்சத்திற்கும் அதிகமானோர் இடம்பெயர்ந்திருப்பதாகவும் அகதிமுகாமில் இருந்தவர்களே இடம்பெயரவேண்டிய நிலை இராணுவக் கெடுபிடிகளால் ஏற்பட்டதாகவும் அச்சஞ்சிகை மேலும் சுட்டிக் காட்டியுள்ளது

## டிசம்பர் மாத நிவாரணம் நேற்றுமுதல் விநியோகம்

(யாழ்ப்பாணம்)
புங்குடுதீவு, நயினாதீவு. பல நோக்கு கூட்டுறவுச் சங்க பாவனையாளர்களுக்குரிய டிசம்பர் மாத முதல் இரண்டு வார நிவாரண உலர் உணவுப் பொருட்கள் நேற்று முதல் சங்கக் கிளைகளில் விநியோகிக்கப்படுகிறது என சங்கத் தலைமைக் காரியாலயம் அறிவித்துள்ளது. (22)

## இடம்பெயர்ந்த மாணவர் பிரச்சினை ஆராய்வு

வலிவடக்கு இடம்பெயர்ந்தோர் புனர்வாழ்வுக் கழகத்தினரின் கூட்டம் நேற்றுமுன்தினம் மருதனார்மடத்தில் இடம்பெற்றது.

வலி. வடக்கிலிருந்து இடம்பெயர்ந்தோர் படும் இன்னல்கள் குறித்தும், அப்பகுதி மாணவர்கள் எதிர்நோக்கும் கல்விப் பிரச்சினைகள் குறித்தும் இக்கூட்டத்தில் ஆராயப்பட்டது. பாதிக்கப்பட்ட பாடசாலைகளை மீள, முழுமையாக இயங்க நடவடிக்கை எடுக்கக் கோரல், மாணவர்களின் கற்றலை முழுமையாக்கல் போன்ற பல பிரச்சினைகள் கூட்டத்தில் ஆராயப்பட்டன.

வலி. வடக்கு உதவி அரசஅதிபர் உட்பட பலரும் கலந்து கொண்டனர், (09). (11)

## விவசாயிகளின் ஓய்வூதிய கொடுப்பனவு

விவசாயிகளின் ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் ஓய்வூதியம் பெறும் யாழ்ப்பாண மாவட்ட விவசாயிகளின் மார்கழி மாதக் கொடுப்பனவுகள் எதிர்வரும் வியாழக்கிழமையன்று கமத்தொழில் காப்புறுதிச் சபை மாவட்ட காரியாலயத்தில் வைத்துவழங்கப்படவுள்ளது.

உள்ளூராட்சித் தேர்தல்

## போட்டியிடுவது குறித்து தமிழ்க்குழுக்கள் முரண்பாடு

(கொழும்பு)
உள்ளூராட்சித் தேர்தலில், ரெலோ, புளொட், ஈரோஸ் குழுக்களும் கூட்டாகப்போட்டியிட தீர்மானித்துள்ளன.

இதே வேளை இத் தேர்தலில், தமிழர் விடுதலைக் கூட்டணி, ஈ. பி. ஆர். எல். எவ், தமிழ்க்காங்கிரஸ் ஆகியன இதில் போட்டியிடவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி போட்டியிடும் குழுக்கள் சுயேட்சை அடிப்படையில் அல்லது ஒரு கட்சியின் பெயரில் போட்டியிடத் தீர்மானித்துள்ளன.

பிறப்பு, இறப்பு

## சான்றிதழ்கள் அனைத்தும் தபாலில் அனுப்பப்பட்டன

(நமது நிருபர்)
யாழ். செயலக விவாக, பிறப்பு, இறப்பு பிரிவினால் 1993 இல் பெறப்பட்ட விண்ணப்பங்களுக்கானசான்றிதழ்கள் அனைத்தும் தபாலில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக மேலதிக மாவட்ட பதிவாளர் அறிவித்துள்ளார்.

கடந்த நவம்பர் 12-ம்திகதி நடந்த குண்டு வீச்சின்போது சில விண்ணப்பங்கள் சேதமடைய வாய்ப்புண்டு. ஆதலினால் மேற்குறிப்பிட்ட தினத்திற்கு முன் விண்ணப்பித்தவர்கள் எதிர்வரும் பத்தாம் திகதிக்கு முன் உரிய பதில் கிடைக்காதுவிடின் புதிதாக விண்ணப்பிக்குமாறு மேலதிக மாவட்டப் பதிவாளர் கேட்டுள்ளார்.

இதேவேளை கடந்த நவம்பர் 12-ம் திகதிக்குப்பின் சமர்ப்பித்தவர்களுக்குரியசான்றிதழ்கள் வரும் பத்தாம் திகதிக்கு முன் கிடைக்காதுவிடின் மேலதிக மாவட்டப் பதிவாளருடன் தொடர்பு கொள்ளுமாறும் அவர் கேட்டுள்ளார். (ச, கி)

## ஒப்புக்கொடுப்பு

யாழ். திருமறைக்கலா மன்றத்தின் வருட முதல் ஒன்றியக் கூட்டத்தை முன்னிட்டு வண-பேராசிரியர் நீ. மரிய சேவியர் அடிகள் தலைமையில் நேற்று முன்தினம் காலை 10 30 மணிக்கு திருக்குடும்ப ஆங்கில பாடசாலை கன்னியர்மட ஆலயத்தில் திருப்பலி நடைபெற்றது.

நிலைய துணை இயக்குநர் வண-ஜெறோம் அடிகளும் இணைந்து நடாத்திய திருப்பலியில் மன்ற அங்கத்துவக் கலைஞர்கள் கலந்துகொண்டனர். (21)

## சீனா ஏனைய நாடுகளுக்கு அச்சுறுத்தலாக இருக்காது

- லீ. பெங் தெரிவிப்பு

(பீகிங்)
பொருளாதார ரீதியில் வலுவடையும் சீனா ஏனைய நாடுகளுக்கு ஒருபோதும் அச்சுறுத்தலாக இருக்காது என்று சீனப்பிரதமர் லீ. பெங் கூறியுள்ளார்.

சீனாவின் உத்தியோக பூர்வ செய்தித்தாபனமான சின்குவாவிற்கு பேட்டியளித்த அவர் மேலும் தெரிவிக்கையில், சீனா பலமடைவது குறித்து ஆச்சரியப்படுவோரில் பலர் கிழக்கு ஐரோப்பா மற்றும் சோவியத்யூனியன் பலவீனமுற்ற போது சீனாவும் பலவீனமாகும் என்றே எதிர்பார்த்தனர் ஆனால் சீனா வீழ்ச்சி அடைவதற்கு பதிலாக மென்மேலும் வளர்ச்சி அடைந்து வருகிறது. உலக சமாதானத்திற்கும் அபிவிருத்திக்கும் சீனா அளப்பெரும் சேவைகளை ஆற்றி வருகிறது என்றும் தெரிவித்தார்.

## அடுத்தசுற்றுப் பேச்சுக்களில் இஸ்ரேல் பங்கு கொள்ளாது

- வெளியுறவு அமைச்சர் அறிவிப்பு

(டெல்அவிவ்)
...ச்சர் சிமொன் பெரஸ் கூறி...

ஆளுநர் உரை இடம் பெறாமையை கண்டித்து

## சட்டப் பேரவையில் இருந்து காங்கிரஸ் உறுப்பினர் வெளிநடப்பு

(சென்னை)
வருடத் தொடக்கத்தில் நடைபெறும் சட்டப் பேரவையின் முதலாவது கூட்டத்தில் ஆளுநர் உரை இடம்பெறாததைக் கண்டித்து தமிழ்நாடு சட்டப்பேரவையின் எதிர்க் கட்சிகள் நேற்று பேரவைக் கூட்டத்திலிருந்து வெளிநடப்புச் செய்தன.

முக்கிய எதிர்க் கட்சியான காங்கிரஸ் கட்சியின் உறுப்பினர்களும், தி. மு. க. உறுப்பினரான பரிதிஇளம்வழுதி மற்றும் எம். ஜி. ஆர். அண்ணா தி. மு. க. உறுப்பினரான கே திருநாவுக்கரசு ஆகியோரும் நேற்று வெளிநடப்புச் செய்தனர்.

இதற்கு சபாநாயகர் அனுமதி மறுத்ததை தொடர்ந்து காங்கிரஸ் உறுப்பினர்கள் அனைவரும் வெளியேறினர். இதேவேளை சபையில் பாலசுப்பிரமணியம் பேசிய சில கருத்துக்களை அவைக் குறிப்பிலிருந்து நீக்கும்படி சபாநாயகர் உத்தரவிட்டதையடுத்து சபையில் கூச்சலும் குழப்பமும் நிலவியது

பின்னர் பத்திரிகையாளர்கள் மத்தியில் பேசிய எதிர்க்கட்சித் தலைவர் எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் பட்ஜெட் கூட்டத்தொடருக்கு முன்பாக ஆளுநர் உரை இடம்பெறும் என்று அரசு உறுதியளிக்கும் வரை காங்கிரஸ் கட்சி பேரவைக்கூட்டங்களை புறக்கணிக்கும் எனத் தெரிவித்தார்

## மேற்கு நாடுகளுடன் இந்தியா உடன்பாடு

இந்தியா 'பயங்கரவாதத்தை' எதிர்த்துப் போரா...

பி. சவான் யு. என். ஐக்கு வழங்கிய பேட்டி ஒன்றில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

உள்ளதாக அவர் அறிவித்துள்ளார். இது இக்காலப்பகுதிக்குள் அவர் பல பாடங்களைக் கற்றுக் கொண்டதைக் காட்டுகின்றதா? அன்றி, சிங்கள அரசியல் வாதிகளின் பொதுவான, 'கோடையில்இராணுவத்தீர்வு, மாரியில் பேச்சுவார்த்தை' என்ற பருவத்திற்கேற்ற நிலைப்பாட்டைக் காட்டுகின்றதா என்பதைத் தெளிவாக கூறிவிடமுடியாது உள்ளது.

இருப்பினும், கடந்த ஆறு மாத காலத்தில், சிறிலங்கா இராணுவம் சந்தித்த மூன்று பெரும் தோல்விகள் இராணுவத் தீர்வு சாத்தியமாகப் போவதில்லை என்பதை சிறிலங்காவில் உள்ள அனைத்துத் தரப்பினருக்குமே உணர்த்தியுள்ளது. இதனை அரசாங்கமும், இராணுவமும் மறுக்க முற்படுவதென்பது, அவர்கள் தங்களைத் தாமே ஏமாற்றிக்கொள்வதாக இருக்குமே ஒழிய, ஒரு போதும் உலக அபிப்பிராயத்தை மாற்றிவிடப் போவதில்லை. இந்நிலையில், டி. பி. விஜேதுங்கவின் மாற்றமானது, தொடரும் தோல்விகளின் விளைவாகவே உருவானதுஎன்பதில் பொருத்தப்பாடு அதிகமாகவே இருக்கும்

ஆனால், டி. பி. விஜேதுங்க தனது அரசியல் குத்துக்கரணங்கள் காரணமாக இருப்பினும் சரி, இராணுவத் தோல்விகள் கொடுத்த படிப்பினையாக இருப்பினும் சரி, இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வே காணப்படமுடியும் என்பதும், அதுவும் விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் பேச்சுவார்த்தை மூலமே காணப்படமுடியும் என்பதையும், இன்று அல்லது சற்றுக் காலம் கடந்தாயினும் டி. பி. விஜேதுங்க உணர்ந்தேயாக வேண்டியது தவிர்க்க முடியாதது

இதனை சிறிலங்காவின் முன்னாள் ஜனாதிபதிகள்-ஏன் இந்தியாவும்கூட உணர்ந்தே இருந்தன. அத்தோடு விடுதலைப்புலிகளை ஒதுக்கிவிட்டு இனப்பிரச்சினை தீர்வு தொடர்பாக எடுக்கப்பட்ட எந்தவித முயற்சியும் வெற்றி பெற்றதாக இல்லை. அவ்வாறு இல்லாது காலம் கடத்துவதற்காகவும், ஒப்புக்காகவும், உலகை ஏமாற்றுவதற்கும்செய்யப்பட்ட முயற்சிகளாகவும், ஏற்பாடுகளாகவுமே இருந்தன.

இந்த நிலையில், இனப்பிரச்சினைக்குத் தீர்வு என்பது, தமிழர் தேசிய இனப்போராட்டத்திற்குத் தலைமை தாங்கும் விடுதலைப் புலிகளுடனேயே மேற்கொள்ளப்பட வேண்டும்/முடியும். இதனை டி. பி. விஜேதுங்க ஏற்றால் என்ன, ஏற்காதுவிட்டால் என்ன? யதார்த்தநிலை இதுவே. மேலும், பேச்சுவார்த்தை, சமாதானத் தீர்வு என்பவை எல்லாம் பேச்சளவில்மட்டும் ஏற்பட்டுவிடக்கூடியவையும் அல்ல. அதற்கு சிறிலங்கா அரசாங்கம் நீண்ட தூரம் வரவேண்டும். ஆனால், நிபந்தனைகள் பலவற்றைக் கையில் தூக்கிப்பிடிக்கும் சிறிலங்கா அரசாங்கத்தால் அது எத்துணை சாத்தியமானது? நிபந்தனைகளுடன் கூடிய பேச்சுக்கள் உலகில் எங்கும் பிரச்சினையைத் தீர்த்ததாக வரலாறே இல்லை.

---

**- வெளியுறவு அமைச்சர் அறிவிப்பு**

(டெல்அவிவ்)

பாலத்தீன விடுதலை இயக்கத்துடனான அடுத்த சுற்றுப் பேச்சுக்களில் தான் கலந்து கொள்ளப் போவதில்லை என்று இஸ்ரேலிய அரசாங்கம் கூறியுள்ளது.

இந்தப் பேச்சுக்கள் எந்தவொரு அடிப்படையில் நிகழ்ந்து இருக்க வேண்டுமோ அந்த அடிப்படையே இப்போது சந்தேகத்திற்கு உரியதாகி இருப்பதாக இஸ்ரேலிய வெளியுறவுத்துறை அமைச்சர் சிமொன் பெரஸ் கூறியுள்ளார்.

மேற்குக் கரைப் பிரதேச மற்றும்காஸா துண்டுநிலப்பகுதியில சுய ஆட்சிஉரிமைபற்றி பாலத்தீன விடுதலை இயக்கத்துடன் இதற்கு முன்பாக நடைபெற்ற பேச்சுவார்த்தை தொடர்பான விரிவான விளக்கமொன்றை இஸ்ரேலியப் பிரதமர் யிட்சாக் ரபீன்நாடியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## எட்டு மாநில அமைச்சர்கள் கர்நாடகாவில் ராஜினாமா

(பங்களூர்)

கர்நாடகா துணை முதலமைச்சர் எஸ்.எம். கிருஸ்ணா உட்பட எட்டு அமைச்சர்கள் வீரப்பமொய்லி அமைச்சரவையில் இருந்து ராஜினாமா செய்துள்ளனர்.

நேற்றுக் காலை மாநில சட்டப் பேரவையில் இடம் பெற்ற மிகப் பெருமளவு கூச்சல், குழப்பங்களைத்தொடர்ந்து இந் ராஜினாமாக்கள் வெளியிடப்பட்டன.

தங்களை கிறிமினல் குற்றவாளிகள் என்று திரு. வீரப்பமொய்லி குறிப்பிட்டதாக சொல்லப்படுதலை எதிர்த்து ஆட்சேபம் தெரிவித்தவாறு அதிருப்திஅடைந்த காங்கிரஸ் சட்டமன்ற உறுப்பினர்கள் சபையின் மையத்திற்கு இறங்கி வந்து போராட்டமொன்றைநடாத்தினார்கள். முதலமைச்சர் இதற்காக மன்னிப்புக் கேட்க வேண்டும் என்றும் அவர்கள் கூறினார்கள். உடனே சபையில் இருந்து வெளியேறிய துணை முதலமைச்சர் எஸ். எம். கிருஸ்ணா பின்னர் ஏழு அமைச்சர்களுடன் சேர்ந்து தனது ராஜினாமாவையும் சமர்ப்பித்து விட்டார்.

இந்த ராஜினாமாதொடர்பாக கருத்துத் தெரிவித்த முதலமைச்சர் வீரப்பமொய்லி கட்சியில் இருந்து முன்னர் வெளியேற்றப்பட்ட முதலமைச்சர் பங்காரப்பாதான் இதற்குகாரணம் எனக் குற்றம் சாட்டினார்.

### உற்பத்தி

முப்பத்து எட்டுக்கும் மேற்பட்ட வீடுகள் சேதமாக்கப்பட்டுள்ளன. மட்டக்களப்பில் முப்பத்து மூவாயிரம் வீடுகள் சேதமாக்கப்பட்டுள்ளன. அத்துடன் 700 இந்து வணக்கத் தலங்கள் அழிக்கப்பட்டதாக இந்து சமயப் பேரவையின்அறிக்கை ஒன்றில் கூறப்பட்டுள்ளது. மேலும்பல கிறிஸ்தவத் தேவாலயங்களும் அழிக்கப்பட்டுள்ளன. சிறுவர்கள் பலர் அகதிகளாக்கப்பட்டுள்ளனர். சுமார் 4லட்சத்து 67ஆயிரம் எனவும் புள்ளிவிபரங்கள் கூறுகின்றன.

## விமான விபத்தில் 119 பேர் பலி

சைபீரியாவில் நேற்றுக் காலை நடைபெற்ற விமான விபத்தில் சிக்கி சுமார் நூற்றுப் பத்தொன்பதுபேர் உயிரிழந்துள்ளனர். இந்தவிமானம் புறப்பட்ட சில நிமிடங்களிலேயே விழுந்து நொருங்கியதாகவும், இவர்களில் 16பேர் வெளிநாட்டவர்கள் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

---

அண்ணா தி. மு. க. உறுப்பினரான கே திருநாவுக்கரசு ஆகியோரும் நேற்று வெளிநடப்புச் செய்தனர்.

நேற்றுக் காலை சபை கூடியதும் புத்தாண்டு தொடக்கத்திலான முதல் கூட்டத்தில் ஆளுநர் உரை இடம் பெறுவது வழக்கமானதென்றும், இம்முறை ஆளுநரின் உரை இடம்பெறாதது ஏன் என்றும் பேரவையின் எதிர்க்கட்சித் தலைவர் எஸ் ஆர். பாலசுப்பிரமணியம் கேள்வி எழுப்பிபேசமுற்பட்டார்.

### 300 பேரைக்

கள் இருக்கலாம் என நம்பப்படுகின்றது.

மேலும்பயன்படுத்தப்பட்ட துப்பாக்கி ரவைகள் பல துணிகள், செருப்புக்கள் போன்றவையும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இங்கு மேல் மாகாண சபை முதல் அமைச்சர் மற்றும் சுதந்திரக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் மாகாண சபை உறுப்பினர்கள் ஆகியோர், ஒரு குழுவினால் அழைத்துச் செல்லப்பட்டு தோண்டப்பட்டன. பலபத்திரிகையாளர், பொலிசார் முன்னிலையில் இவை தோண்டப்பட்டன.

இம் மலைத்தொடர் கடல் மட்டத்தில் இருந்து 4400 அடி உயரத்திலுள்ளது. ஒலிபரப்பு கூட்டுத்தாபன கோபுரம் இருப்பதால் பலத்த பாதுகாப்பு கொடுக்கப்பட்டது. 1989ஆம் ஆண்டு எம்பிலிப்பிட்டியாவில் இருந்து இராணுவத்தினால் கைதுசெய்யப்பட்ட பின்னர் காணாமல் போன 31 பாடசாலை மாணவர்களின் புதைகுழிகள் இவை என்று நம்புவதாக இந் நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை தமக்கு கிடைத்த தகவலின்படி200,300க்கு இடைப்பட்டவர்கள் இங்கு கொன்று புதைக்கப்பட்டுள்ளதாகவும், கொல்லப்பட்டவர் அனைவரும் 1989-ம் ஆண்டு அரசாங்கத்தை எதிர்த்தவர்களுக்கு எதிராக பயன்படுத்தப்பட்ட வன்முறைக்கு பலியானவர்கள் என மேல் மாகாண சபை முதல் அமைச்சர் சந்திரிக்கா குமாரணதுங்கா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக முழுமையான நடுநிலையான விசாரணை நடைபெறவேண்டும் என்றும் இவர் அரசுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

எதிர்வரும் 8ஆம் திகதி மீண்டும் தோண்டும் பணி ஆரம்பிக்கப்படவுள்ளதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

---

இந்தியா 'பயங்கரவாதத்தை' எதிர்த்துப் போராடும் முயற்சிகளின் ஒரு பகுதியாக அமெரிக்கா, கனடா, ஜேர்மனி ஆகிய நாடுகளுடன் குற்றவாளிகளை விசாரணைகளுக்காக தாயகம் திருப்பி அனுப்பிட வகை செய்யும் ஒப்பந்தங்களில் கையெழுத்திடவுள்ளது.

உள்துறை அமைச்சர் எஸ். பி. சவான் யு என். ஐக்கு வழங்கிய பேட்டி ஒன்றில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். பிரிட்டனுடனான இத்தகைய உடன்படிக்கையொன்றில் இந்தியா ஏற்கனவே ஒப்பந்தம் ஒன்றைச் செய்துள்ளது. இது 1993 ஆம் ஆண்டின் மிகப்பெரும் சாதனையாகும் என்றும் அமைச்சர் கூறினார்.

## மனநிறைவு தரும்வகையில் பேச்சுக்கள் அமைந்துள்ளன

பாகிஸ்தானுக்கும் இந்தியாவுக்கும் இடையிலான வெளியுறவுச் செயலாளர் நிலையிலான பேச்சுக்கள் மனநிறைவை தரத்தக்க வகையில் ஆரம்பித்து இருப்பதாக இஸ்லாமாபாத் சென்றிருக்கும் இந்திய வெளியுறவு செயலாளர் ஜே. என். டிக்சிற் கூறியுள்ளார்.

இஸ்லாமாபாத்தில் நேற்று முன்தினம் மாலை செய்தியாளர்கள் மத்தியில் பேசிய அவர் மேலும் கூறுகையில்' பாகிஸ்தானில் எல்லா மட்டங்களிலுமே மிகவும் நியாயமான விவேகமான மற்றும்

ஜே. என். டிக்சிற்

நடைமுறைக்கு ஏற்ற சூழ்நிலை காணப்படுவதாக தெரிவித்தார்.

முதலாம் சுற்று பேச்சுக்களின்போது காஷ்மீர் நிலைவரம் பற்றிய தத்தமது நிலைப்பாட்டை இரு தரப்பாரும் முன்வைத்ததாகப் கூறப்படுகிறது.

### மோதல்

மெக்சிக்கோவில் தென் மாநிலப் பகுதியிலுள்ள இராணுவ முகாம் ஒன்றிலிருந்த படையினருக்கும், ஆயுதமேந்திய கிராமவாசிகளுக்கும் இடையே ஏற்பட்ட மோதலில் 55 பேர் கொல்லப்பட்டுள்ளனர். புத்தாண்டு முதல் இங்கு நடைபெற்று வரும் கிளர்ச்சிகளில் நான்கு நகரங்கள் தாக்கப்பட்டதில் மேலும் 26 பேர் கொல்லப்பட்டதாகவும் கூறப்படுகிறது

### புக்காரா

குண்டு வீச்சு விமானம் கடற் பகுதியோடு குடியிருப்புப் பகுதிகளை அதிக உயரத்தில் பறந்த வண்ணம் வட்டமிட்டுவிட்டு ஆனையிறவுப் பக்கமாகப் பறந்து சென்றது.

(யோ)

### நீதிமன்ற

நாலரைப் போத்தல் கசிப்பு விற்பனை செய்தமைக்காக சுன்னாகம் காவல் துறையினரால் குற்றம் சாட்டப்பட்டார். விசாரணையை அடுத்து 19,000 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது

இணுவில் தியேட்டர் வீதியைச் சேர்ந்த தனேஸ்வரன் வசந்தமாலா என்பவர் கசிப்பை உற்பத்தி செய்து விற்பனைசெய்தமைக்காக, விசாரணையையடுத்து 12,000 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

(09)

## மலேரியாவா? பயப்படவேண்டாம்

## "கோபாம்"

சீந்திக்காடி சிறந்த மருந்தாகும். வேப்பம் பட்டைக் காடி நோயை முழுமையாக சுகப்படுத்தும். எல்லா விதமான விஷம் சுரங்களுக்கும் காட்டுக்காய்ச்சல்களுக்கும் ஆரம்பித்த உடனேயே ''கோபாம்'' மருந்துகளைப் பாவித்து பூரண சுகத்தைப் பெறுங்கள்.

நெருப்புக்காய்ச்சலா?

கோபாம் முந்திரிகைக்காடி பாவியுங்கள்.

## புதுவருடத்தில் ஆரோக்கியமாக வாழ எமது புத்தாண்டு வாழ்த்துக்கள்

மேலும் விபரங்களைப் பெறவும், ''கோபாம்'' மருந்துகளைப் பெற்றுக்கொள்ளவும்,

இன்றே நாடுங்கள்,

"யாழ்ப்பாணம் பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் கொத்தணி" யினால்

நடாத்தப்படுகின்றதும், எல்லாவிதமான சித்த மருந்துகளும் கிடைக்குமிடமான,

### சித்த மருந்து விற்பனை நிலையம், 572, மருத்துவமனை வீதி, யாழ்ப்பாணம்.

பொது முகாமையாளர்,
யாழ்ப்பாணம் ப. தெ. வ. அபிவிருத்திக்
கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி (சி/8275)


## மகாபொல கொடுப்பனவு

இரண்டாம் வருட மாணவர்களுக்கான 6ஆம் தவணைப் பணமும், ஏனைய வருட மாணவர்களுக்கான 1ஆம் தவணைப் பணமும் யாழ் பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ள மக்கள் வங்கி நவீனசந்தைக் கிளையில் மேற்கொள்வதற்கான ஒழுங்குகள் பின்வருமாறு செய்யப்பட்டுள்ளன:

கலைப்பிரிவு.
2-ம், 3-ம், 4-ம் வருட மாணவர்கள்
04-01-94 9-00 — 12-00 மு. ப.
10-01-94 9-00 — 12-00 மு. ப.

வியாபார நிர்வாகப்பிரிவு:
2-ம், 3-ம், 4-ம் வருட மாணவர்கள்
05-01-94 9-00 — 12-00 மு. ப.
11-01-94 9-00 — 12-00 மு. ப.

வர்த்தகப்பிரிவு;
2-ம், 3-ம், 4-ம் வருட மாணவர்கள்
06-01-94 9-00 — 12-00 மு. ப.
12-01-94 9-00 — 12-00 மு. ப.

மருத்துவப்பிரிவு:
2-ம், 3-ம், 4-ம், 5-ம் இறுதிவருட மாணவர்கள்
07-01-94 9-00 — 12-00 மு. ப.
17-01-94 9-00 — 12-00 மு. ப.

கொடுப்பனவின்போது சமர்ப்பிக்கப்பட வேண்டியவை
1. பல்கலைக்கழக மாணவர் அடையாள அட்டை
2. ரூபா 2/- பெறுமதியான முத்திரை.

(சி-8279) பதிவாளர்.

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

### 03 - 01 - 1994

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 47

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்

41-7297, 26-3473, 26-6461, 40-7583. 26-8497, 24-1040, 27-6821, 24-7941, 41-8155, 26-4376, 42-9625, 41-5605, 24-5964 24-9645, 26-2125 43-0517, 26-5962, 27-1380. 24-4636, 26-4091, 45-3945, 24-6699, 24-6448.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்

24-8631, 24-5416, 41-9895, 41-9396, 28-3429, 26-7217, 41-9876, 24-2445, 28-1085, 41-9211.


## புத்தாண்டின் அதிர்ஷ்டசாலிகள்

1ஆம் பரிசு ரூபா 2500/- சி. இல: 2936
திருமதி விஜயகுமார் ஏழாலை தெற்கு, சுன்னாகம்

2ஆம் பரிசு ரூபா 1500/- சி. இல: 3141
எஸ். தினேஷ் 69, மவுண்ட் காமல் வீதி, குருநகர்.

3ஆம் பரிசு ரூபா 1000/- சி. இல: 3125
பா ஹரிச்சந்திரா 41, கே.கே.எஸ். வீதி, சுன்னாகம்.

எமது அன்பளிப்பு மடல்கள் மூலமும் ரூபா 500/-ற்கு மேற்பட்ட கொள்வனவு மூலமும் பரிசுத் திட்டத்தில் பங்கு பற்றுங்கள்.

குறைந்த விலை - சிறந்த பொருள்கள்
மலிவு விலையில் பல வீட்டுப்பாவனைப் பொருள்கள்

### எழிலகம்

மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
(சி-8278)


## 31-ம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்:
04. 06. 1919

மறைவு:
05. 12. 1993

### திரு. வீரகத்தி கந்தையா

(முன்னாள் கிராமசபை உறுப்பினர்)
மிருசுவில்

எழுதுமட்டுவாள் தெற்கு வீரகத்தி கந்தையா 05 - 12 - 1993ல் காலமாகிவிட்டார். இவர் காலஞ்சென்ற சின்னம்மாவின் அன்புக் கணவரும் நடராசா

## மூளைக்காய்ச்சல் சிறுமி மரணம்

(யாழ்ப்பாணம்)

கொழும்புத்துறை கிழக்கைச் சேர்ந்த நான்கு வயதுச் சிறுமி ஒருவர் மூளைக்காய்ச்சல் நோயினால் பீடிக்கப்பட்டு யாழ்.போதனாவைத்தியசாலையில் கடந்த சனிக்கிழமை மரணமானார்.

செல்வி சற்குணம் அமலினி என்கின்ற சிறுமியே மரணமானவராவார். இவர் மூளைக் ாய்ச்சலினால் பீடிக்கப்பட்டு கடந்த வெளிக்கிழமை யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார். பின்னர் சனிக்கிழமை அங்கு மரணமானார் என தெரிவிக்கப்பட்டது. (24)

## விஞ்ஞான நிகழ்ச்சி

யாழ். விஞ்ஞானச் சங்கம் நடாத்தும் விஞ்ஞான நிகழ்ச்சி எதிர்வரும் 11ஆம் திகதி மு. ப. 9.00 மணிக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடை பெறவுள்ளது. இதில் விஞ்ஞான பேச்சுப் போட்டி, விஞ்ஞான வினாவிடைப் போட்டி ஆகியன நடைபெறவுள்ளன. 28 கல்லூரிகள் இதில் பங்கு பற்றுவது குறிப்பிடத்தக்கது.

## கூட்டம்

சண்டிலிப்பாய் கல்விக் கோட்ட அதிபர்களின் கூட்டம் புதன்கிழமை பிற்பகல் இரண்டு மணியளவில் யாழ் மானிப்பாய் இந்துக் கல்லூரியில் நடைபெற இருப்பதாகவும், தெல்லிப்பழை கல்விக் கோட்ட அதிபர்களின் கூட்டம் வியாழக்கிழமை பிற்பகல் இரண்டு மணியளவில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி மண்டபத்தில் நடைபெற இருப்பதாகவும் கோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்

ஃ ஃ ஃ

(வடமராட்சி)

மருதங்கேணி கல்விக் கோட்ட பாடசாலை அதிபர்களுக்கான கூட்டம் ஒன்று நாளை புதன்கிழமை காலை 10 மணிக்கு செம்பியன்பற்று அ. த. க. பாடசாலையில் நடைபெறவுள்ளதாக பிரதிப்பணிப்பாளர் திரு. வ. செல்வராசா தெரிவித்தார். (யோ)

## கொட்டகலை பாடசாலை சாதனை

ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் நுவரெலியா கொட்டகலை தமிழ்ப் பாடசாலையில் 35 பேர் பங்குபற்றியதில் 27 பேர் சித்தியடைந்துள்ளனர்.

ஹாட்லிக்

## கண்ணீர் அஞ்சலி

யாழ். இந்துக்கல்லூரி மாணவன்
அ. கமலஜெயனின்
தாயாரான அமரர் இலட்சுமிப்பிள்ளை
அரசரட்ணம் அவர்களின்
மறைவையொட்டி
எமது ஆழ்ந்த அனுதாபத்தினை
அன்னாரின் குடும்பத்திற்கு
தெரிவித்துக்கொள்கின்றோம்.

13'A' கணிதப்பிரிவு
யாழ் இந்துக்கல்லூரி ஆசிரியர்கள், மாணவர்கள். (7137)

## மரண அறிவித்தல்கள்

### திரு. அருணாசலம் கணேசபிள்ளை

திரு. அருணாசலம் கணேசபிள்ளை (முன்னைநாள் கலேவெலை அருணா கோப்பரேசன் உரிமையாளர்) கிளிநொச்சியில் காலமானார். இவர் காரைநகர் பாலாவோடையைப்பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம் அபூபக்கர் வீதியை வசிப்பிடமாகவும் கொண்டவராவார். இவர் யோகாம்பிகையின் அன்புக் கணவரும் திரு. தவபாலசிங்கம் (பழைய கண்டி, டீசல் கடை காரைநகர்), திருமதி வி. நேசமணி, திரு. தேவராசா (பிரான்ஸ்) திரு. தயாபரன் (வர்த்தகர் கிளிநொச்சி), திருமதி தனலஸ்மி, திரு. புலேந்திரன் (பிரான்ஸ்) ஆகியோரின் தந்தையாரும் திரு. விக்னேஸ்வரன் (கொழும்பு), திரு. லோகேந்திரா (காசி) (நியூதேவி ஸ்ரோர்ஸ் பழைய பூங்கா வீதி) ஆகியோரின் மாமனாரும், துஷ்யந்தியின் பேரனாரும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் நேற்று 03 - 01 - 1994 காலை 10. 00 மணிக்கு கிளிநொச்சியில் தகனம் செய்யப்பட்டது. இதனை உற்றார், உறவினர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

க. தவபாலசிங்கம்
(மகன்)

6, அபூபக்கர் வீதி,
யாழ்ப்பாணம். (7136)

### சு. ஜெயராசசேகரம்

(வின்ஸ்லோ கடைச்சல் பட்டடை யாழ்ப்பாணம்)

அளவெட்டி தெற்கு சு. ஜெயராசசேகரம் அவர்கள் 03 - 01 - 1994இல் காலமாகிவிட்டார். அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியம், அன்னம்மா ஆகியோரின் புதல்வரும், ஜெயமணியின் அன்புக் கணவரும், ஸ்ரீதரன், தர்ஷனி, குகநேசன், தர்மினி ஆகியோரின் தந்தையும், திருமதி இந்திராதேவி, சந்திரசேகரம், ஞானசேகரம், குணசேகரம் ஆகியோரின் சகோதரனும் ஆசிரியர் அம்பலவாணரின் மைத்துனரும் ஆவார். அன்னாரின் பூதவுடல் இன்று 4-1-1994 காலை 9 00 மணிக்கு அளவெட்டி தெற்கு மயானத்தில் தகனம் செய்யப்படும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்ளுகின்றோம்.

தகவல்:

அ. கருணாகரன்
(மருமகன்)
(7139)

(சி-8279) பதிவாளர்.

## எடிசன் அக்கடமி

(யாழ் இந்துக்கல்லூரி அருகாமையில்)
411/1, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

**கல்வி ஆண்டு 1994**

### ஆண்டு 4 முதல் O/L வரை

யாழ். திறமைமிகு ஆசிரியர் குழுவின்
இணைந்த சேவை

| | | |
|---|---|---|
| கணிதம் | : | திரு. B. P. பாஸ்கரன் |
| விஞ்ஞானம் | ) | திரு. இரா, செல்வவடிவேல் |
| | ) | திரு. J. J கொலின்ஸ் |
| ச.கல்வீ | : | திரு. K. S முத்துலிங்கம் |
| தமிழ் | ; | திரு.தங்கவேல் - S. கதிர்காமத்தம்பி |
| ஆங்கிலம் | : | திரு மனோரஞ்சன் |
| வர்த்தகம் | : | திரு விக்கி |
| சமயம் | : | திரு. கோ. இராஜலிங்கம் |

ஆரம்பம்:

**06-01-1994 வியாழன் பி ப. 4 மணி**

குறிப்பு:

- O/Lஇற்குகணிதம், விஞ்ஞானம் 8-ம்மாதம் பாடத் திட்டம் பூர்த்தியாக்கப்படும்.
- 18 வருட வினாக்கள் மீட்கப்படும்.

(சி-8281)

எழுதுமட்டுவாள் தெற்கு வீரகத்தி கந்தையா 05 - 12 - 1993ல் காலமாகிவிட்டார். இவர் காலஞ்சென்ற சின்னம்மாவின் அன்புக் கணவரும் நடராசா காலஞ்சென்ற மகேஸ்வரி பூபதி, பாலசுந்தரம் (சித்த மருத்துவத்துறை யாழ். பல்கலைக்கழகம்), பாலசுப்பிரமணியம், தங்கராசா (நிர்வாகப் பிரிவு யாழ் பல்கலைக்கழகம்), கனகசுந்தரம் (சவுதி), கனகராசா ஆகியோரின் அருமைத் தந்தையும் நடேசு, தெய்வேந்திரம்பிள்ளை (நூலகம் யாழ். பல்கலைக்கழகம்), திருமதி சின்னப்பிள்ளை. திருமதி புவனேஸ்வரி, திருமதி யோகேஸ்வரி, திருமதி இராசேஸ்வரி, திருமதி சுமதி ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார். அன்னாரின் அந்தியேட்டிக்கிரியை 04 01-1994 (செவ்வாய்க்கிழமை) 12மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும். அதில் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

எழுதுமட்டுவாள் தெற்கு,
எழுதுமட்டுவாள்.

தகவல்:
மக்கள், மருமக்கள்
பேரபபிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

(7141)

## ஹாட்லிக் கல்லூரி
## ஆண்டு 6
## அனுமதி-1994

5-ம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்து இக்கல்லூரியில் அனுமதி பெற விரும்புவோர் தற்போது கல்வி கற்கும் பாடசாலை அதிபரினால் உறுதிப்படுத்தப் பட்ட புள்ளி விபரங்களுடன் 07-01-94க்கு முன்பாக விண்ணப்பிக்கவும்.

அதிபர்

(சி-8276)

அ. கருணாகரன்
(மருமகன்)

(7139)

## புதிய எடிசன் அக்கடமி

(கொக்குவில் இந்து அருகாமையில்)
27, கே. கே. எஸ். வீதி,
கொக்குவில்.

**கல்வி ஆண்டு 1994**

### ஆண்டு 4 முதல் O/L வரை

யாழ். முன்னணி ஆசிரியர் குழுவின்
ஒருங்கிணைந்த சேவை

| | | |
|---|---|---|
| கணிதம் | : | திரு B.P. பாஸ்கரன் |
| விஞ்ஞானம் | ) | திரு. J R. சூரி |
| | ) | திரு. J.J. கொலின்ஸ் |
| ச. கல்வி | : | திரு. க. கோபி |
| தமிழ் | ) | திரு. தங்கவேல் |
| | ) | திரு S. கதிர்காமத்தம்பி |
| ஆங்கிலம் | : | திரு. C. சத்தியமூர்த்தி |
| வர்த்தகம் | : | திரு தர்மராஜன் |
| சமயம் | : | திரு. கோ. இராஜலிங்கம் |

ஆரம்பம்

**06-01-1994 வியாழன் பி. ப. 4மணி**

முக்கிய குறிப்பு:

- O/L வகுப்பிற்கு 8-ம் மாதம் சகல பாடங்களிலும் பாடத்திட்டம் பூர்த்தியாக்கப்படும்.
- கடந்த 18 வருட வினாக்கள் மீட்கப்படும்.

(சி-8282)

### பாடசாலை மாணவர்களுக்கு
## "டொயாட்டோ கோஸ்ரர்" வசு வண்டி

மல்லாகத்திலிருந்து வேம்படி மகளிர் பாடசாலைச் சந்தி, யாழ் சென்பற்றிக்ஸ் சந்தி, சுண்டுக்குளி மகளிர் பாடசாலை சந்திவரை ஈடுபடுத்தப்பட்டுள்ளது.

பயணம் செய்ப விரும்புவோர் தொடர்புகொள்ள வேண்டிய முகவரி;

மது புத்தகசாலை,
கே. கே. எஸ் வீதி,
கொக்குவில்.

பவித்திரா பான்ஷி ஹவுஸ்,
கே. கே. எஸ் வீதி,
மல்லாகம்.

நித்திய ஸ்பொட்,
கே. கே. எஸ். வீதி.
சுண்ணாகம்.

சீக்கோ ஹாட்வெயர்
கே. கே. எஸ் வீதி,
தாவடிச் சந்தி,

தாசன் ஸ்ருடியோ,
கே. கே. எஸ் வீதி,
இணுவில்.

(சி-8277)

## மீண்டும் சித்ராலயாவில் போட்டோஸ்ரற் பிரதிகளைப் பெற்றுக்கொள்ளலாம்

(7138)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 81 ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1994ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 04ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.